23rd August 1960]

Harijan trustees

* **402 Q.—SRI P. G. MANICKAM**: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

" **Hindu Religious Endowment Board** "-ன் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் எத்தனை கோவில்களிலே ஹரிஜனங்கள் டிரஸ்டிகளாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In forty-seven temples.

SRI P. G. MANICKAM: ஸார், இன்னும் எத்தனை கோவில்களில் ஹரிஜனங்கள் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்படவில்லை? புள்ளி விவரங்கள் அரசாங்கத்தினிடம் இருந்தால் அறிய விரும்புகிறேன்.

THE HON SRI M. BHAKTAVATSALAM: அப்படி புள்ளி விவரங்கள் இல்லை. எங்கெங்கே காலி ஸ்தானங்கள் ஏற்படுகின்றனவோ, அங்கே ஹரிஜனங்களை ட்ரஸ்டிகளாக நியமிக்கக் கவனம் செலுத்தப் படுகிறது. சில கோவில்களுக்கு கோர்ட் ஸ்கீம்களின் மூலம் நிர்வாகம் நடைபெறுகிறது. அங்கு தலையிட்டு புதிதாக ட்ரஸ்டிகளைப் போட்டுவிடுவது அசாத்தியம்.

MR. SPEAKER: As question Nos. 403 and 407 are on the same subject, I suggest that they may be taken together. 9-00 a.m.

Backward classes

* **403 Q.—SRI P. G. MANICKAM**: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) ஒரு மனிதர் பிற்பட்டவரா, இல்லையா என்பதுபற்றி அவரால் செய்யப்படும் தொழில் மூலமாகவும், ஏழ்மை நிலைமையின் மூலமாகவும், தீர்மானிக்கப்படவேண்டும் என்பதுபற்றி நம் ராஜ்ய சர்க்காரின் அபிப்பிராயத்தையறிய, யூனியன் சர்க்காரிடமிருந்து ஏதாவது கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்று வருகின்றதா?

(ஆ) அவ்வாறிருப்பின், இது சம்பந்தமாக நம் ராஜ்ய சர்க்காரின் கருத்துக்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir.

(*b*) The Government are examining the report submitted by Sri R. A. Gopalaswamy, I.C.S., on the 'Reform of the system of community concessions in Educational Institutions and appointment to Public Services'. A decision regarding the criterion to be adopted for the classification of Backward Classes would be taken only after the examination of the above report is over.